# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • நவம்பர் 9, 2019 Weekly E-paper • NOVEMBER 9, 2019




# அமைதியின் விலை

• சுப. வீரபாண்டியன்

நேர்காணல்: பூவுலகின் நண்பர்கள்

**கூடங்குளம் அணு உலையில் சைபர் தாக்குதல்**

நேர்கண்டவர்: மா.உதயகுமார்

**காவிக்குள் அடங்காதவர் திருவள்ளுவர்!**

தலையங்கம்



**ஊரும் உணர்வும்**


இக்லாஸ் உசேன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • நவம்பர் 9, 2019    Weekly E-paper • NOVEMBER 9, 2019


# அமைதியின் விலை



எத்தனை ஆண்டுகள்! எத்தனை கலவரங்கள்! எத்தனை உயிர்ப்பலிகள்! எப்படியோ அமைதி திரும்பினால் சரி என்ற மனநிலைக்கு மக்களில் பெரும்பாலோர் வந்துவிட்ட தருணத்தில், அயோத்தி வழக்கில் தீர்ப்பு வெளிவந்துள்ளது.

2010 ஆம் ஆண்டு அலகாபாத் உயர்நீதிமன்றம், 2.77 ஏக்கர் நிலத்தை மூன்று தரப்பினருக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்று கூறியிருந்தது. அத்தீர்ப்பு தவறானது என்று இப்போது உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. அந்த இடத்தில், ராமர் கோயில் கட்டிக் கொள்ளலாம் என்றும், மசூதி கட்டுவதற்குத் தனியாக 5 ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதே தீர்ப்பில், "பாபர் மசூதி இடிக்கப்பட்டதும், அந்த இஸ்லாமிய அமைப்பு தகர்க்கப்பட்டதும், அதிர்ச்சி தரத்தக்க சட்ட மீறல் ஆகும்" என்றும் கூறப்பட்டுள்ளது. ( "The destruction of the mosque and the obliteration of the Islamic structure was an egregious violation of the rule of law") அந்த அதிர்ச்சி தரத்தக்க சட்ட மீறலுக்கு என்ன தண்டனை என்று கேட்டால், அது தனி வழக்கு, அதற்கும் இதற்கும் தொடர்பில்லை என்று கூறுகின்றனர். இரண்டுக்கும் தொடர்பில்லை என்றால், இந்த வழக்கிற்கான தீர்ப்பில், அது குறித்துப் பேசுவானேன்?

பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கு இனிமேல் நடந்து அதில் தீர்ப்பு வரும் என்ற நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது.

அடுத்ததாக, இஸ்லாமியர்கள் தரப்பு சரியான ஆதாரங்களைத் தரவில்லை என்று நீதிமன்றம் கூறியுள்ளது. அப்படியானால், இந்து மதத் தரப்பினர் கொடுத்துள்ள ஆதாரங்கள் எவை என்று நமக்குத் தெரியவில்லை. மத நம்பிக்கைகளில் குறுக்கிடக்கூடாது என்பதே அத்தீர்ப்பின் சாரம்.

நிலைமை இவ்வாறிருக்க, சில இஸ்லாமிய அமைப்புகள் உள்பட அனைவரும் இதனை ஏற்றுக்கொண்டுள்ளது எதனால்? வேறொன்றுமில்லை, மதங்களுக்கு இடையிலான குழப்பம் ஏற்பட்டு, அது நாட்டின் அமைதியைக் கெடுத்திடக் கூடாது என்பதால்தான்,

இரண்டு நாடுகளுக்கு இடையில் நடந்த போர்களில் ஏற்பட்ட பாதிப்புகளையும், உயிர் இழப்புகளையும் விட, இரண்டு மதங்களுக்கு இடையிலும், ஒரே மதத்தின் உட்பிரிவுகளுக்கு இடையிலும் நடந்த மோதல்களால் ஏற்பட்ட பாதிப்பும், உயிரிழப்புகளும்தாம் மிகுதி!

அந்தக் கொடுமை இனியும் தொடர வேண்டாம் என்ற எண்ணம் பொதுவாகவே மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அந்த அமைதி, நாட்டில் நீடித்து நிலைக்க வேண்டுமென்றால், அதற்கு ஒரு விலை கொடுத்துத்தானே ஆகவேண்டும்!

● சுப. வீரபாண்டியன்

## ஆதரவாளர்களுடன் ஓர் அரைநாள்!



'சுபவீயுடன் உரையாடுங்கள்' என்னும் தலைப்பில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பில் ஓர் அழைப்பு விடுக்கப்பட்டது. பேரவையின் ஆதரவாளர்களாகவும், பிற அமைப்புகளில் உறுப்பினர்கள் அல்லாதவர்களாகவும் இருக்கும் நண்பர்கள், 10.11.2019 ஞாயிறு காலை 10 மணிக்கு, பேரவையின் தலைமையகத்தில், தோழர் சுபவீயைச் சந்தித்து உரையாடலாம் என்றும், முதலில் பதிவு செய்துகொள்ளும் 25 பேருக்கு மட்டுமே இம்முறை அனுமதி வழங்கப்படும் என்றும் சென்னை மாவட்டப் பேரவை சார்பில் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஐம்பது பேருக்கும் மேலாக ஆர்வம் காட்டியதால், முதலில் பதிவு செய்த 35 நண்பர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதில் முப்பதுக்கும் மேற்பட்ட நண்பர்கள் உரிய நேரத்தில் வந்து கலந்து கொண்டனர்.

திராவிடம்/தமிழ் என்னும் தேவையற்ற மோதல் ஏன் இங்கு ஏற்படுகிறது, இதனை யார் உருவாக்குகிறார்கள் என்பதான வினாவே பலராலும் முன்வைக்கப்பட்டதால் , அது குறித்துப் பேரவையின் பொதுச் செயலாளர், 45 நிமிடங்களுக்கும் மேலாக விளக்கிப் பேசினார்.

என்றென்றும் திராவிட இயக்கக் கொள்கைகளை மக்களிடம் எடுத்துச் செல்லத் தாம் உறுதுணையாக இருப்போம் என்று வந்திருந்த நண்பர்கள் இறுதியில் கூறினர்.

அந்த இடத்திலேயே 11 பேர் இயக்க உறுப்பினர்களாகத் தங்களை இணைத்துக் கொண்டனர். மற்றவர்களும், தொடர்ந்து பேரவைப் பொதுச் செயலாளரோடு தொடர்பில் இருப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அடுத்தடுத்த மாவட்டங்களிலும், இதே போன்று, 'சுபவீயுடன் உரையாடுங்கள்' நிகழ்சசியை எடுத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை** நடத்தும்

**அறிவுத்தேடல் – 5**

நாள்: 15.11.2019 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி
இடம் :அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை-18

**வள்ளுவத்தின் மையப்பொருள் மதமா, மனிதமா?**

**தோழர் சுப. வீரபாண்டியன்**

தரும் விரிவான விளக்கவுரையும் வினா விடைப் பகுதியும்!
அனைவரும் வருக!

# கூடங்குளம் அணு உலையில் நடத்தப்பட்ட சைபர் தாக்குதல்

● நேர்காணல் வழக்கறிஞர் வெற்றிச்செல்வன், பூவுலகின் நண்பர்கள் ● நேர்கண்டவர்: மா.உதயகுமார்

**அண்மையில் கூடங்குளம் அணுஉலையில் நடத்தப்பட்ட சைபர் தாக்குதல் முதலில் மறுக்கப்பட்டு பின்னர் வேறு வழியின்றி நடந்ததாக ஒப்புக்கொண்ட செய்தியின் பின்னணி என்ன?**

தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பைச் சேர்ந்த முன்னாள் அலுவலர் இதுபற்றி தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டு இருந்தார். அதை சசிதரூர் தன்னுடைய பக்கத்தில் பதிவு செய்தார், பின்னர் அது பரவலாக வெளியானது. இந்த தாக்குதல் நடந்தது செப்டம்பர் 4. இதுகுறித்து தன் மேலதிகாரியிடம் சொல்லி விட்டதாகவும் அந்த முன்னாள் அலுவலர் சொன்னார். பின்னர் இந்திய அணுசக்திக் கழகம் பத்திரிக்கையாளர் சந்திப்பில் இதுபோன்று எதுவும் நடக்கவில்லை என்று சொன்னது.

ஆனால் கணினியில் வைரஸ் தாக்குதல் நடத்தப்பட்ட ஆதாரங்கள் அதன்பின் கண்டறியப்பட்டது. வேறு வழியின்றி அடுத்த நாள் இந்திய அணுசக்திக் கழகம் அதை ஒப்புக் கொண்டது.

**எந்த மாதிரியான சைபர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது?**

இந்த தாக்குதல் நிர்வாகப் பணிசெய்யும் கணினியில் மட்டுமே நடந்தது என்றும் தொழில்நுட்பம் சார்ந்த கட்டுப்பாட்டுக் கணினியில் எந்தத் தாக்குதலும் நடத்தப்படவில்லை என்றும் தெரிவித்தனர். அதனால் பெரிய பாதிப்பு இல்லை என்றும் தெரிவித்தனர். நிர்வாகப் பணிசெய்யும் கணினிக்கும் கட்டுப்பாட்டுக் கணினிக்கும் தொடர்பு இருக்காது என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படியே வைத்துக் கொண்டாலும் இன்று நிர்வாகப் பணிசெய்யும் கணினியில் தாக்குதல் செய்வதுபோல நாளை கட்டுப்பாட்டு கணினியிலும் செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அது நிர்வாகப் பணி செய்யும் கணினியாக இருந்தாலும் கூட அதிலும் அணுஉலை தொடர்பான தகவல்கள், மேலாண்மைத் திட்டங்கள், அணுக்கழிவு பற்றிய தகவல்கள் போன்றவை சேமிக்கப்பட்டிருக்கும். அந்த தகவல்கள் திருடப்பட்டாலும் அழிக்கப்பட்டாலும் கூடப் பேரிழப்புதான்.

இதேபோல் ஈரானில் 2010இல் ஒரு விஞ்ஞானியின் பென் ட்ரைவில் வைரஸ் ஏற்றப்பட்டு அந்த அணுஉலை செயலிழக்கச் செய்யப்பட்டது. அதனால் இங்கும் இது போன்ற தாக்குதல் நடத்தப்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றன.

**இந்திய அணுசக்திக் கழகத்தின் செயல்பாடு எப்படி இருக்கிறது?**

AERB என்னும் ஒழுங்காற்று வாரியம் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும். இதுபோன்ற சைபர் தாக்குதல் நடத்தப்பட்டால் முதலில் அதற்கு ஒரு கண்காணிப்புக் குழு அமைத்துத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். பிறகு தீர்வுகளை நோக்கி நகர வேண்டும். ஆனால் இவர்கள் செய்தது என்ன? ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எந்த ஆய்வும் செய்யாமல் உடனே அப்படியெல்லாம் எதுவுமில்லை என்று மறுக்கிறார்கள். இது ஜனநாயகத்திற்கு எதிரானது.

இந்திய அணுசக்திக் கழகம் என்பது இந்திய விடுதலைக்கு முன்பாகவே உருவாக்கப்பட்டுவிட்டது. நேரடியாகப் பிரதமர் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அதனால் இவர்களிடம் எந்த ஒரு பொறுப்புணர்ச்சியும் கிடையாது. இங்கு ஒரு விஷயம் என்னவென்றால் இந்திய அணுசக்திக் கழகத்தில் பணியாற்றுபவர்கள் எல்லாம் மேல் சாதியைச் சார்ந்த மேல்தட்டு வர்க்கத்தினர். அவர்கள் எப்போதும் ஆதிக்க உணர்வோடு தாங்கள் சொல்வது தான் சட்டம் என்று செயல்படுகிறார்கள். தங்களுக்கு மட்டும் தான் அறிவு இருக்கிறது, எளிய மக்களுக்கு அறிவு கிடையாது என்கிற மனநிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். ஜனநாயகத்திற்கு எதிரான போக்குதான் இந்திய அணுசக்தி



கழகத்திடம் இருக்கிறது.

**அணு உலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எந்த அளவிற்கு இருக்கின்றன?**

இப்போது இருக்கும் அணு உலைகள்தான் உலகிலேயே பாதுகாப்பானது என்று கூடங்குளம் போராட்டம் நடந்தபோது சொன்னார்கள். ஆனால் கடந்த 5 ஆண்டுகளாகவே அணு உலையைத் தொடர்ந்து இயக்க முடியவில்லை. இரண்டு மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஏதோ ஒரு தொழில்நுட்பக் கோளாறால் அவர்கள் இதைத் தொடர்ந்து இயக்க முடியாமல் நிறுத்தி வைக்கிறார்கள். அணுக்கழிவுகளைப் பற்றி உச்ச நீதிமன்றம் பதிலளிக்கச் சொல்லியிருந்தது. அணுக் கழிவுகளை மேலாண்மை செய்யக்கூடிய தொழில் நுட்பக் கருவிகள் இல்லை என்பதால் தங்களுக்கு நேரம் வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் சொல்லி இருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளை ஒப்புக்கொள்கிறார்கள். இப்போது நடந்திருக்கும் சைபர் தாக்குதல் கூடுதலான ஆபத்துதான்.

**அணு உலையில் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டால் ஏற்படும் பாதிப்பு என்ன?**

சைபர் செக்யூரிட்டி என்பது 100% பாதுகாப்பானது அல்ல. யாராலும் தாக்குதல் நடத்த முடியாது என்று உறுதியாய்ச் சொல்ல முடியாது. கண்டிப்பாக சைபர் தாக்குதல் நடக்கத் தான் செய்யும். வங்கியிலோ மற்றும் அலுவலகங்களிலோ சைபர் தாக்குதல் நடத்தப்படலாம் அதிகபட்சம் பணம் சில தகவல்கள் திருடப்படலாம் அல்லது அழிக்கப்படலாம் ஆனால் ஒரு அணு உலையில் சைபர் அட்டாக் நடத்தப்பட்டால் அங்கே இருக்கும் இயந்திரங்களைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முடியும். அதன் மூலம் அவற்றைச் செயலிழக்கச் செய்யவும் முடியும் விபத்துகள் ஏற்படச் செய்யவும் முடியும் இதனால் மக்கள் உயிருக்குத்தான் பேராபத்து ஏற்படும்.

அய்ந்து ஆண்டுகளுக்குத் தேவையான யுரேனியம் அங்கு சேமித்து வைக்கப்பட்டு இருக்கிறது. இது ஹிரோஷிமா நாகசாகியில் வெடித்த அணுகுண்டை விட 100 மடங்கு சக்தி வாய்ந்தது. இதில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் உண்டாகும் பாதிப்புகளைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது. ●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

திராவிட இயக்கத் தமிழர் பேரவை
நடத்தும்



இந்திய விடுதலைப் போராட்ட வீரர்

## திப்பு சுல்தான்

பிறந்த நாள் விழா



நாள்: 23-11-2019, சனிக்கிழமை,
நேரம்: மாலை 6.30 மணி,
இடம்: இந்திய அலுவலர் சங்கம், லாயிட்சு சாலை, இராயப்பேட்டை, சென்னை 600014

வரவேற்புரை: தோழர் மு.மாறன்
முன்னிலை: தோழர்கள் முத்தையா குமரன், இரா.உமா, செல்வின், தமிழ் மறவன், சாந்தசீலன்
தொகுப்புரை: தோழர் ப.எட்வின்
தலைமை: தோழர் ஆ.சிங்கராயர்

சிறப்புரை:
திருமிகு **திருச்சி சிவா**
கொள்கை பரப்புச் செயலாளர் - திமுக,
இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்.

திருமிகு **ஆ.இராசா**
கொள்கை பரப்புச் செயலாளர் - திமுக,
இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்.

நன்றியுரை: தோழர் வளசை கணேசன்

அன்புடன் அழைக்கும்
**சுப.வீரபாண்டியன்**
பொதுச் செயலாளர்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை.

## திருச்சி கருத்தரங்கம்




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில், 2-11-2019 அன்று திருச்சியில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் பொதுச்செயலாளர் தோழர் சுப.வீரபாண்டியன், நினைவுப் பரிசை, திமுக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் தோழர் புதுக்கோட்டை விஜயாவிற்கு வழங்கினார்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## காவிக்குள் அடங்காதவர் திருவள்ளுவர்!

யாழ்ப்பாணத்தில் உருத்திராட்சக் கொட்டை, திருநீற்றுப் பட்டையுடன் 19ஆம் நூற்றாண்டில் வெளியான ஒரு திருவள்ளுவர் படத்தைக் காட்டி, திருவள்ளுவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்று தமிழகத்தில் பாஜக/ ஆர்.எஸ்.எஸ் காரர்கள் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். இது அவர்களின் அறியாமையைக் காட்டுகிறது.

யாழ்ப்பாணத்தில் பார்ப்பனர்கள் குறைவு. சைவ வேளாளர்கள் எண்ணிக்கையில் சற்று அதிகம் அவ்வளவுதான்.

சைவ வேளாளர்களால் அவர்களுக்காக மட்டுமே வடிவமைக்கப்பட்ட அந்த வள்ளுவர் படம் தமிழகம் உள்பட பரந்துபட்ட அளவில் வடிவமைக்கப்பட்டது அன்று. அது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே உரியது.

அதனால்தான் 1959ஆம் ஆண்டு அன்றைய காங்கிரஸ் அரசால் வேணுகோபால சர்மா மூலமாக ஒரு வள்ளுவர் படம் உருவாக்கப்பட்டு அது அஞ்சல் தலையாக வெளியிடப்பட்டது.

இந்த வள்ளுவர் படம் உருவாகத் துணை நின்றவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், அறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், அன்றைய முதல்வர் பக்தவச்சலம், முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர்.

அண்மைக் காலம் வரையில் அந்தப்படம்தான் எந்தவிதச் சாதி, மத அடையாளமும் இல்லாமல் வெள்ளை உடையுடன் இருந்தது.

தருண்விஜய் திருக்குறள் பற்றி தமிழ்நாட்டில் பேசிய மேடைகளில் கூட வள்ளுவர் உடை வெள்ளையாகத்தான் இருந்தது.

ஆனால், இப்பொழுது ஹெச்.ராஜா, நாராயணன், ராகவன் போன்ற இந்துத்துவச் சிந்தனையாளர்கள் திருவள்ளுவர் இந்துக் கடவுள் பெயர்களைத் திருக்குறளில் சொல்லியிருக்கிறார், அவர் ஓர் இந்து என்று காவி உடையை பொருத்துகிறார்கள்.

“இந்திரனே சாலும் கரி” என்று இந்திரனை வள்ளுவர் சொல்லும்பொழுது, ஒழுக்கம் குன்றிய ஒருவனுக்கு இந்திரனே சான்றாவான் என்று இந்திரனின் செயலை வைத்து அவனை இழிவாகச் சொல்கிறார்.

“பரந்து கெடுக உலகியற்றி யான்” என்று சொல்லுமிடத்தில், இந்த உலகில் ஒருவன் பிச்சை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அவனைப் படைத்தவன் (உலகத்தை படைத்தவன்) என்று சொல்லப்படுபவன் பரந்துபட அழிந்துவிடுவான் என்று வள்ளுவர் சொல்கிறார். இங்கே உலகைப் படைத்தவன் என்று சொல்பவனையும் பழித்துப் பேசுகிறார்.

இவையெல்லாம் இறைவனுக்கு எதிராகச் சொல்லப் பட்டிருப்பதினால், திருவள்ளுவர் எப்படி இந்துவாக இருக்க முடியும். பாஜக/ ஆர்.எஸ்.எஸ் என்ன முயன்றாலும் தமிழ்நாட்டில் அவர்கள் காலூன்றத் திருவள்ளுவர் உதவமாட்டார்.

“திருக்குறள் எனும் கடலை, ஒரு சிமிழுக்குள் அடைக்க முயற்சிக்காதீர்” என்ற கவிஞர் வைரமுத்துவின் வரிகளை நினைவு படுத்துவோம்.

# ஊரும் உணர்வும்

## இக்லாஸ் உசேன்



கடுமையான சட்டங்கள் திறமையான குற்றவாளிகளை உருவாக்கும் என்பதை நிரூபித்து இருக்கிறது, நீட் தேர்வுமுறை.

இந்தியக் கல்வித் தேர்வு முறைகளிலே கடுமையான பரிசோதனைக்குப் பின் நடக்கும் தேர்வுமுறையாக மருத்துவத்திற்கான நீட் தேர்வுமுறை கடந்த மூன்றாண்டாக நம்பவைக்கப்பட்டது.

கடந்த செப்டம்பர் மாதம், நீட் தேர்வு எழுதியவர் ஒருவர், மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தவர் மற்றொருவர் என்கிற ஆள்மாறாட்ட விவகாரம் வெளிவந்தது.

உதித் சூர்யா என்கிற மாணவர் பெற்றோரோடு கைது செய்யப்பட்டார்.

அடுத்து சென்னை மாணவி பிரியங்காவுக்காக ஆள்மாறாட்டம் செய்து தேர்வு எழுதிய பெண் யார் என்று விசாரிப்பதாகவும், இதோடு மதிப்பெண் சான்றிதழைத் திருத்தியும் மோசடி செய்துள்ளதாகவும் இதற்கு மருத்துவத் துறை அதிகாரிகள் உடந்தையாக இருந்திருக்கலாம் என்றும் சி.பி.சி.ஐ.டி. போலீசார் சந்தேகிப்பதாகத் தகவல் வெளியானது.

ஆள் மாறாட்ட வழக்கில் இதுவரையில் 10 பேர் பிடிபட்டுள்ளனர். நீட் தேர்வுப் பயிற்சி மையங்கள் மூலமாகவே தரகர்கள் ஆள் மாறாட்டத்துக்கு ஆட்களைத் தேர்வு செய்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் 412 இலவச நீட் பயிற்சி மையங்களில் பயிற்சி வழங்கும் முதுநிலை ஆசிரியர்களுக்கு மதிப்பூதியமாக வழங்க 58,800 ரூபாய், LCD projector, கணிணி உள்ளிட்ட பொருட்கள் வாங்குவதற்காக 1 லட்சத்து 66 ஆயிரம் என மொத்தம் 2 லட்சத்து 24 ஆயிரத்து 800 ரூபாய் ஒதுக்கப்பட்டதில் கூட, மாணவர்களுக்கு இலவச நீட் பயிற்சி வகுப்பு நடத்தாமல் அரசு உபகரணங்கள் வாங்கக் கொடுத்த பணத்தையும் முறைகேடு செய்த பிரச்சினை திருநெல்வேலி, கடையநல்லூர் பகுதியில் நடந்துள்ளது.

இந்நிலையில் நீட் தேர்வு முறைகேடு, வழக்காகி அது உயர்நீதிமன்ற நீதிபதிகள் கிருபாகரன், வேல்முருகன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

நீதிபதிகள் ஒரு கருத்தை வெளியிட்டனர். நீட் தேர்வுப் பயிற்சிக்கு ரூ.5 லட்சம் என்றால், கிராமப்புற மாணவர்களின் டாக்டர் கனவு எப்படிச் சாத்தியமாகும்? முந்தைய அரசு கொண்டு வந்த திட்டங்களை எல்லாம் அடுத்த (இன்றைய) அரசு முடக்கி வைப்பது போல நீட் தேர்வையும் மத்திய அரசு திரும்பப் பெற்றிருக்கலாமே என்று கேள்வி எழுப்பினர்.

நீட் தேர்வு முறையால் தமிழகத்தின் ஏழை மாணவர்களின் மருத்துவக் கனவு எப்படிச் சிதைக்கப்பட்டது என்பதைத் தமிழக அரசின் சார்பில் ஆஜரான கூடுதல் அட்வகேட் ஜெனரல் அர்விந்த் பாண்டியன் அறிக்கை தெளிவாக விளக்குகிறது.

தமிழகத்தில் 48 மாணவர்கள் மட்டுமே தானாகப் படித்து நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று, அரசு மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். சேர்ந்துள்ளனர். மீதி 3033 மாணவர்கள், நீட் தனியார் பயிற்சி மையங்களில் படித்துத்தான் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றுச் சேர்ந்துள்ளார்கள்.

தானாகப் படித்து நீட் தேர்வு மூலம் வந்தவர்கள் 1.6 சதவிகிதம் மட்டுமே நீட் பயிற்சி தேர்வு மூலம் வராமல் நேரடியாக வந்தவர்கள்.

அதே போல், வெறும் 52 மாணவர்கள் மட்டுமே தானாகப் படித்து நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர்.

1,598 மாணவர்கள் நீட் பயிற்சி மையங்களில் படித்துத் தேர்ச்சி பெற்று, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர்.

மேலும், 1,628 பேர் மட்டுமே முதல்முறை நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்.

3,103 மாணவர்கள் 2வது, 3வது முறைகளில்தான் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இந்தத் தகவல்கள் அரசு அளித்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளது. (இவர்கள் எல்லாம் நீட் பயிற்சிக்காக பத்து லட்சம் ரூபாய் வரை செலவு செய்து இருக்கக்கூடும்)

நீட் தேர்வுப் பயிற்சி வகுப்பில் சேராமல் நீட் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் வெறும் 100பேர் மட்டுமே என்று அரசு ஆவணம் சொல்கிறது.

ஒட்டுமொத்தத் தமிழக மருத்துவக் கல்லூரிகளில் நீட் பயிற்சி மையம் மூலம் படித்துத் தேர்வு எழுதியவர்களின் விழுக்காடு 96.63%, நீட் பயிற்சி மையத்தில் படிக்காமல் நீட் தேர்வில் வெற்றி பெற்றுக் கல்லூரியில் சேர்ந்தவர்கள் 3.2 % மட்டுமே.

96.63% மருத்துவக் கல்லூரி மாணவர்களைத் தீர்மானிப்பது தனியார் நீட் பயிற்சிப் பள்ளிகளே.

ஒரு மாணவன் தனியார் நீட் பயிற்சிப் பள்ளியில் படிக்கவேண்டும் என்றால் ஆண்டுக்கு மூன்று லட்சம் ரூபாய் செலவிட வசதி இருந்தால் மட்டுமே சாத்தியம்.

இந்த 2019 நீட் தேர்வில் ஒரு லட்சத்து இருபதாயிரம் மாணவர்கள் தேர்வு எழுதியிருந்தார்கள். அதில் ஒரு லட்சம் பேர் தனியார் நீட் பயிற்சி மையத்தில் படித்தவர்கள் எனக் கணக்கிட்டு ஒவ்வொரு மாணவரும் தலா மூன்று லட்சம் செலவு செய்ததாகக் கணக்கிட்டாலே மொத்தம் 30ஆயிரம் கோடி அளவுக்கு, நீட் பயிற்சிப் பள்ளிகள் வருவாய் ஈட்டி இருக்கின்றன (இந்தத் தொகை தமிழகத்தின் மொத்த பட்ஜெட் தொகையில் 15விழுக்காடு).

உயர்நீதிமன்ற நீதிபதிகள் பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே சாத்தியமாக உள்ள நீட் தேர்வு தேவைதானா என்ற கேள்வி எழுப்புகிறார்கள். இதே கேள்வி தமிழகம் முழுக்க பல ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுந்துகொண்டே தான் இருக்கிறது.

தகுதியற்ற ஆளுமைகளால் தமிழ்நாடு ஆளப்படுகிறது. அவர்கள் நீட் தேர்வை நீக்க மத்திய அரசிடம் வலியுறுத்தாமல் அடிமைகள் போலச் செயல்படுகிறார்கள். இன்றைய நிலையில் ஆட்சி மாறினால் காட்சி மாறும். காட்சி மாறினால்தான் நீட் தேர்வு மூலம் மருத்துவக் கல்வித்துறையில் சூழ்ந்துள்ள திறமையான குற்றவாளிகளுக்கு எதிராகப் போராடி நீட் தேர்வை நம் மாநிலத்தை விட்டே விரட்டமுடியும் என்கிற சூழலே நிலவுகிறது.

எதிர்கால அரசியல் மாற்றத்தில் தான்... ஏழை எளியோர்களின் மருத்துவக் கனவும் அடங்கி இருக்கிறது. நாம் என்ன செய்யப் போகிறோம்?! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,